
## திராவிடத்தால் வாழ்கிறோம்

811

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

7

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்.**

பேரறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த, கழகத்தின் முதல் அமைச்சரவையில் எஸ்.ஜே.சாதிக் பாட்சா. நிற்பவர்களில் வலமிருந்து மூன்றாவது.



## அரசியல் பிரதிநிதித்துவம் தந்த கழகம்!

'பாரத்' என்றும் அழைக்கப்படும் இந்தியா, மாநிலங்களின் ஒன்றியம். இது ஒரு இறையாண்மை கொண்ட சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு' என்பதுதான் இந்த நாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டம் தரும் விளக்கம். ஆனால், கடந்த 11 ஆண்டுகள் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மதச்சார்பின்மை மெல்ல மெல்ல செத்து வருகிறது. மூன்றாவது முறையாக கடந்த ஆண்டு மோடி தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றபோது, அதில் இஸ்லாமியர் ஒருவருக்குக் கூட இடம் தரவில்லை. வரலாற்றில், முதன்முறையாக இஸ்லாமியர் இல்லாத ஒரு அமைச்சரவை அமைந்திருக்கிறது.

இந்தியாவில், உள்ள சுமார் 20 கோடி இஸ்லாமியர்களின் பிரதிநிதிகளாக 24 பேர் கடந்த மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்திற்குச் சென்றனர். அதில் 21 பேர் இந்தியா கூட்டணியைச் சேர்ந்தவர்கள். அகில இந்திய மஜ்லிஸ்-இ-இடிஹாதுல் முஸ்லிமின் கட்சியின் தலைவர் அசாதுதீன் ஓவைசி, சுயேட்சைகளான ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த அப்துல் ரஷீத் ஷேக், லடாக்கைச் சேர்ந்த முகமது ஹனீபா ஆகியோர் மற்ற மூவர். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ஒற்றை இஸ்லாமியப் பிரதிநிதிகூட நாடாளுமன்றத்திற்கு வரவில்லை. ஏன், சீக்கியர்கள், கிறிஸ்தவர்களும் கூட இல்லை.

எனினும் கிறிஸ்தவர்கள், சீக்கியர்களுக்கு ஒன்றிய அமைச்சரவையில் இடம் அளிக்கப் பட்டது. இஸ்லாமியர்கள் மட்டுமே முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டனர். ஆனால், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் இஸ்லாமியர்களின் பங்கேற்பு இல்லாத ஒரு அமைச்சரவை கூட கிடையாது. அந்த பந்தம் 1967-இல் கழகம் ஆட்சியில் அமர்ந்தபோது உருவானதல்ல. சுயமரியாதை இயக்கத்திற்கு முன்பிருந்து, நீதிக்கட்சிக் காலத்தில் இருந்தே நிலைத்து வரும் பந்தம்.

### மதவாதமும் – சமூகநீதியும்

குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில், நம் நாடு இந்திய விடுதலைக்கு அப்பாற்பட்டு, மற்றொரு சிக்கலைச் சந்தித்திருந்தது. மத அடையாளத்தின் அடிப்படையில் வட இந்திய அரசியல், வடிவம் பெறத் தொடங்கியது. ஆனால், தெற்கில் பார்ப்பனர் அல்லாதோருக்கான அரசியல் மேலோங்கத் தொடங்கியது. வடக்கில் மதவாத அரசியலை வளர்த்தெடுத்த ஆர்.எஸ்.எஸ்.ஸும், தெற்கில் பார்ப்பனரல்லாதோருக்கான சமூக நீதி அரசியலை வலுப்படுத்திய சுயமரியாதை இயக்கமும் 1925-ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டன.

ஆனால், அதற்கு முன்பே வடநாட்டில் மதவாதமும், தென்னாட்டில் சமூகநீதி அரசியலும் வடிவம் பெறத் தொடங்கியது. அதற்கு முக்கியக் காரணங்கள் வடநாட்டில் இந்து மகா சபை, தென்னாட்டில் நீதிக்கட்சி.

'இந்து மகா சபா' 1915-இல் உருவானது, 'நீதிக்கட்சி' எனப்படும் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' 1916-இல் உருவாக்கப்பட்டது. வடக்கில் வேரூன்றிய மதவாதம், இந்தியாவை இந்து நாடாக்க வேண்டும் என்று லட்சியத்தைக் கொண்டிருந்தது. இந்தியா இந்துக்களின் நாடு என்பதில், ஆர்.எஸ்.எஸ்.ஸைத் தோற்றுவித்த ஹெட்கேவர் மிக உறுதியாக இருந்தார். இந்து தேசத்திற்கு எதிரிகளே முஸ்லிம்கள்தான் என்றும் பேசினார். முஸ்லிம்களை 'யவனப் பாம்புகள்' என்று சாடினார்.

ஆனால், தெற்கே உருவாகியிருந்த 'நீதிக் கட்சி', 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற திராவிடவியல் சமத்துவக் கோட்பாட்டை முன்வைத்தது. கல்வி, வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்பட்டிருந்த பார்ப்பனரல்லாத எல்லா பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது. அதில் இஸ்லாமியர்களும் ஓர் அங்கமாக இருந்தனர்.

உதாரணத்திற்கு, 1920-களில் மதராஸ் சட்டசபையில், நிர்வாகத்தை இந்தியர் மயமாக்குவது தொடர்பாக ஒரு விவாதம் நடைபெற்றது. காவல்துறையில் ஐரோப்பியர்களுடன் சேர்த்து இந்தியர்களுக்கும் சில பொறுப்புகளை வழங்க வேண்டும் என சி.வி.வெங்கட் ரமண ஐயங்கார் ஒரு கோரிக்கையை வைத்தார்.

ஒருவேளை, இந்தியர்களுக்கு வழங்கப் பட்டால், அது யாருக்குப் போகும் என்பது கடந்த கால அனுபவங்களில் இருந்து, நீதிக்கட்சி நன்றாக உணர்ந்திருந்தது. அதனால் அந்த விவாதத்தில் பேசிய நீதிக்கட்சியின் முன்னணித் தலைவர் டி.எம்.நாயர், "காவல் துறைப் பதவிகளை பார்ப்பனரல்லாதோருக்கும் வழங்க வேண்டும். பார்ப்பனரல்லாதோர் என்றால் முகமதியர்கள், இந்திய கிறித்துவர்கள், பார்ப்பனரல்லாத இந்துக்கள், ஜெயினர்கள், பாரசீகர்கள், ஆங்கிலோ இந்தியர்கள்" என்று விளக்கம் அளித்தார்.

இஸ்லாமியர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியது மட்டுமின்றி, பல்வேறு அலுவலகங்களிலும் அவர்களுக்கான இடத்தை உறுதிப்படுத்தியது நீதிக்கட்சி. அத்தோடு சமூகப் பாதுகாப்பையும் உறுதிப் படுத்தியது. சிறுபான்மையினர் குறித்த நீதிக்கட்சியின் தெளிவான புரிதல், பெரியார், அண்ணா, கலைஞர் காலத்தில் அடுத்தடுத்த கட்டங்களுக்குப் பரிணமித்தது.

### திராவிட நாட்டில்...

குறிப்பாக, 1944-ஆம் ஆண்டு பெரியார் நீதிக்கட்சியை திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றினார். 'திராவிட நாடு' முழக்கம் வலுப்பெறத் தொடங்கியது. 1948-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் தேதி இன்றைய மயிலாடுதுறை மாவட்டம், பெரம்பூரில் திராவிடர் கழகத்தின் ஆண்டு விழா கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், 'முஸ்லிம்கள் எங்களை ஆதரித்தாலோ அல்லது எதிர்த்தாலோ எது நடந்தாலும், நாளை 'திராவிட நாடு' சுயராஜ்யத்தை அடையும் போது, அதனால் உங்களுக்குப் பாதிப்பு வராது என உறுதியளிக்கிறேன். ஏனெனில், இஸ்லாமியர்களும் திராவிடர்களே என திராவிடர் கழகம் உறுதியாக நம்புகிறது' என்று தீர்மானம் நிறைவேற்றினார் பெரியார்.

திராவிட இயக்கம் இஸ்லாமியர்களுக்கு அளித்த பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசும் இவ்விடத்தில், திராவிட இயக்கப் பிரதிநிதியாகவே சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் கண்ணியமிகு காயிதே மில்லத் என்பதையும் குறிப்பிட வேண்டும். 1946 முதல் 1952-ஆம் ஆண்டு வரை மதராஸ் சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தவர். அப்போது, இடஒதுக்கீடு, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, தமிழுக்கு முக்கியத்துவம் என திராவிட இயக்கம் கொண்டிருந்த நிலைப்பாடுகளையே காயிதே மில்லத் எதிரொலித்தார்.

பின்னர், 1952 முதல் 1958 வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகவும், 1962, 1967, 1971 தேர்தல்களில் கேரளா, மஞ்சேரி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார் காயிதே மில்லத். அங்கும் இதே குரல்தான் ஒலித்தது.

### புதிய பாதை அமைத்த அண்ணா

பேரறிஞர் அண்ணா திராவிடர் கழகத்தில் இருந்து விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய பின்னர், இஸ்லாமியர்களுக்கும் திராவிட இயக்கத்திற்கும் இடையிலான உறவு புதிய உச்சத்தைத் தொட்டது. பெரியாரின் நாத்திகக் கொள்கையால் இருந்த மிகச்சிறிய இடைவெளியையும் இட்டு நிரப்பியது, அண்ணாவின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' முழக்கம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் எடுத்துச் சொன்னார் அண்ணா.

1962-ஆம் ஆண்டில் காமராஜர் தலைமையிலான அரசு அப்துல் மஜீத்தை அமைச்சராக்கும் முன்புவரை, காங்கிரஸ் ஆட்சியில் ஒரு இஸ்லாமியர்கூட சுதந்திர இந்தியாவில் அமைச்சராக இருந்ததில்லை. ஆனால், 1962 சட்டமன்றத் தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த திருச்சி அப்துல் வஹாப் ஜானி, தி.மு.க. அணியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார்.

1967-ஆம் ஆண்டு தேர்தலிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தி.மு.கழகத்துடன் இணைந்தே போட்டியிட்டது. தி.மு.கழகம் வென்றது, அண்ணா முதலமைச்சர் ஆனார். அந்தச் சரித்திர அமைச்சரவையில் கலைஞர், மதியழகன், சத்தியவாணிமுத்து, ஏ.கோவிந்தசாமி, செ.மாதவன், முத்துசாமி ஆகியோருடன் சாதிக் பாட்சாவையும் அமைச்சர் ஆக்கினார் அண்ணா. மண்ணின் மைந்தர்களில் ஒருவரான சாதிக் பாட்சாவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையைத் தந்தார்.

> **"பெரியாரின் நாத்திகக் கொள்கையால் இருந்த மிகச்சிறிய இடைவெளியையும் இட்டு நிரப்பியது, அண்ணாவின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' முழக்கம்."**

...நீளும்

## "டெல்லி தன்னால் ஆனதைப் பார்க்கட்டும்!"

தமிழ்நாடு அரசின் மாநில சுயாட்சித் தீர்மானம் குறித்து, மூத்த பத்திரிகையாளர் கோவி. லெனின் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். அதில், "என்னால் ஆனதை நான் செய்துவிட்டேன். இனி, டெல்லி தன்னால் ஆனதைப் பார்க்கட்டும்" என்ற பேரறிஞர் அண்ணாவின் நெஞ்சுறுதி, நமது முதலமைச்சரிடம் வெளிப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

1969-இல் ராஜமன்னார் தலைமையிலான குழுவை அமைத்து, மைய-மாநில உறவுகள் குறித்து அறிக்கையைப் பெற்ற முதலமைச்சர் கலைஞர், அதனை பிரதமர் இந்திராகாந்திக்கும் அனுப்பிவைத்ததுடன், 1974-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தைப் பிற மாநில முதலமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்து, மாநில உரிமைகளின் பாதுகாவலராகத் திகழ்ந்தார்.

இந்தியாவின் தேசிய கீதம் போல தமிழ்நாட்டுக்கு 'தமிழ்த்தாய் வாழ்த்து', ஆளுநர்களிடமிருந்த தேசியக் கொடி ஏற்றும் உரிமையை முதலமைச்சர்களுக்குப் பெற்றுத் தந்தது, பொது நுழைவுத் தேர்வு ரத்து, தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி.பி.சிங் அமைத்த 'இன்டர்-ஸ்டேட் கவுன்சில்', ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது தி.மு.க. முன்னெடுத்த த.மா.கா., தெலுங்குதேசம், அசாம் கண பரிஷத் கட்சிகள் அடங்கிய கூட்டாட்சி முன்னணி (Federal front), வாஜ்பாய் தலைமையிலான தேசிய முற்போக்கு கூட்டணியில் மதவாதக் கொள்கைகளுக்குக் கடிவாளம் போட்டு- மாநில நலன்களை முன்னிலைப்படுத்திய குறைந்தபட்ச பொது செயல்திட்டம், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மாநிலக் கட்சிகளின் பங்களிப்பு, இவை எல்லாமும் கலைஞரின் மாநில சுயாட்சிக் கொள்கையின் படிப்படியான விளைவுகளே.

மாநில சுயாட்சிக்கான இன்றைய தேவையின் அடிப்படையில் அதற்கான தீர்மானத்தை சட்டமன்றத்தில் முன்மொழிந்து, ஒன்றிய-மாநில உறவுகள் மற்றும் மாநில உரிமைகள் மீட்டெடுப்பு தொடர்பாக ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி, பேராசிரியர் நாகநாதன் கொண்ட குழுவை அமைத்துள்ளார். முதல்வரின் அறிவிப்பு, "டெல்லி தன்னால் ஆனதைப் பார்க்கட்டும்' என அன்று பேரறிஞர் அண்ணா கொண்டிருந்த நெஞ்சுறுதி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஆ.ஆத்மலிங்கம்



### நீலத்தநல்லூருக்கும் - மதனத்தூர் பாலம்!

தஞ்சாவூர் - அரியலூர் ஆகிய இரண்டு மாவட்ட மக்களும் நீலத்தநல்லூருக்கும், மதனத்தூருக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டித்தர வேண்டும் என நீண்ட நாள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதை ஏற்று, 03-02-2010 - அன்று பாலம் கட்ட அடிக்கல் நாட்டிய அன்றைய துணை முதலமைச்சர் தளபதியாருக்கு நன்றி கூறும் விதமாக, குடந்தை அனைத்து வணிகர் சங்கக் கூட்டமைப்பின் சார்பில் பாலத்தின் மாதிரி வடிவமைப்பை, கண்ணாடிப் பேழையில் வைத்து, வழங்கினோம். அன்றைய இளைஞர் அணித் துணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் அவர்கள் தலைமையில், வணிகர் சங்க நிர்வாகிகளுடன் சென்று, அந்த நினைவுப் பரிசை வழங்கியபோது எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– ஆ.ஆத்மலிங்கம், முன்னாள் அறங்காவலர்,
குடந்தை வணிகர் சங்கம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் பயணம்!

1957-ஆம் ஆண்டு. மே மாதம் 3-ஆம் தேதி. சென்னை. சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து. கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.வெ.கி. சம்பத்தும் தர்மலிங்கமும் முதன்முறையாக நாடாளுமன்றம் புறப்பட்டனர். அவர்களை வழியனுப்ப, பேரறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர் என ஒட்டுமொத்தமாக கழகத்தினர் அனைவரும் திரண்டு வந்தனர். கழகத்தினர் தவிர, தபால் தந்தி ஊழியர்களும், ஒன்றிய அரசு துறை ஊழியர்களும் திரண்டு வந்து வழியனுப்பி வைத்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.